**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் பங்குனித் திங்கள் 23ம் நாள்

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06ம் நாள் திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண். 48/2025**

**CNR.NO.TNMY07-000045-2025**

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், தெற்கு ரத வீதி கதவிலக்கம் 37/20 என்ற முகவரியில் இயங்கி வரும் எக்விடாஸ் சுமால் பைனான்ஸ் பேங்க் லிமிட் கிளை மேலாளர் க. அருள்குமார் வயது 34. **...வாதி**

**...எதிர்...**

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், ராதாநல்லூர், கதவிலக்கம் 13/24F என்ற முகவரியில் வசித்து வரும் வீரமணி அவர்கள் மனைவி நிரைகலா வயது 49. **...பிரதிவாதி**

தாவா தொகை ரூ.26,164/-க்கு பின்வட்டியுடன் வாதிக்கு பிரதிவாதியிடமிருந்து கிடைக்கும்படி உத்தரவிடக்கோரியும், செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இவ்வழக்கு தாக்கலான நாள் | 03.03.2025 |
| இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 06.03.2025 |
| இவ்வழக்கின் வழக்கு மூலம் ஏற்பட்ட நாட்கள் மற்றும் இடம் | 08.01.2025, 13.01.2025 ஆகிய தேதிகளில் வழக்கு மூலம் எழுந்துள்ளது. |
| இவ்வழக்கின் பொருமானம் மற்றும் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் | தாவா தொகை ரூ.26,164/- என மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கு நீதிமன்றக் கட்டணமாக ரூ.785/- நீ.ம.க.ச பிரிவு 22ன் படி செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 12.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. M. சுதா அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், கடந்த 19.09.2025 அன்று பிரதிவாதியை இந்நீதிமன்றத்தில் அழைத்து ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராக்கப்பட்டு, ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரை, ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்பாணை**

1. இவ்வழக்கானது செலவுத்தொகையுடன் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

2. தாவா தொகையான ரூ.26,164/-ஐ பிரதிவாதி, வாதிக்கு திருப்பிச் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

3. தாவா தொகை ரூ.26,164/-க்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதிவரை ஆண்டுக்கு 12% வட்டியும், பின்னிட்டு தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை முழுவதும் திருப்பிச் செலுத்தும் தேதிவரையில் ஆண்டுக்கு 6% பின்வட்டி சேர்த்து வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

**வாதி, பிரதிவாதி தரப்பில் செலவுத்தொகை பட்டியல் விபரம் தாக்கல் செய்யப்படவில்லை.**

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06ம் நாள் என் கையொப்பம் இந்நீதிமன்ற முத்திரையுடன் இடப்பட்டது.

(ஒம்/- மா. சந்திரமோகன்)
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**தீர்ப்பாணை**
அசல் வழக்கு எண்.48/2025
நாள்.06.04.2026.